Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 624/2025 PW-6**

Name : முருகானந்தம்
Father / Husband name : சாமிநாதன்
Village : திண்டிவனம்
Age : 53
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 12.06.2026

Accused present. Both counsel present. Witness identified by Tindivanam PS HC Tr.Arulkumar.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டிவனம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான செந்தில்முருகன் அவர்களின் கையெழுத்தும் கையொப்பமும் எனக்கு நன்கு பரிச்சியம். கடந்த 15.12.2024 அன்று திண்டிவனம்அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவந்த அ.சா.1 விஸ்வநாதன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அன்றையதினம் 19.50 மணிக்கு நிலையம் வந்து சிஎஸ்ஆர் 966/2024 வழங்கப்பட்டது. 16.12.2024 அன்று 17.30 மணிக்கு மேற்படி மனு ரசீதை பார்வையிட்டு நிலைய குற்ற எண் 683/2024, U/s 296(b),115(2),118(1),351 (3) BNS ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 17.12.2024 அன்று காலை 8 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் காசிநாதன் மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்துள்ளார். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி**

**வரைபடம் அசாஆ 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான விஸ்வநாதன், குப்பு, பத்மா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவர எதிரியை தேட அன்றையதினம் பகல் 12 மணியளவில் எண்டியூர் கிராமம் பாலத்தின் அருகே எதிரி சிவாவை காரணம் கூறி கைது செய்து 13.00 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனைக்கு பின் பாராவசம் ஒப்படைத்துள்ளார். உதவி ஆய்வாளர் செந்தில்முருகன் பணிமாறுதல் காரணமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இந்த வழக்கில் காயம்பட்ட விஸ்வநாதன் என்பவருக்கு மருத்துவசிகிச்சை அளித்த உதவி மருத்துவர் புருசோத்தமன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்றிதழ் பெற்றேன். **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது U/S 296(b),115(2),118(1),351 (3) BNS ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 புகார்தாரர் கொடுத்த புகாரை விசாரணை அதிகாரி சரிவர விசாரிக்காமல், சம்பவயிடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.